செ.வெ.எண்:33 நாள்:17.11.2018

**நாகப்பட்டினம் மாவட்டம்**
**நாகப்பட்டினம் மாவட்டத்தில் "கஜா"புயலால் பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களில் சீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகின்றன.**
**மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் தகவல்**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் "கஜா" புயலால் பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சீரமைக்கும் பணிகளை பார்வையிடும் பொருட்டு வருகை தந்துள்ள மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் இன்று(17.11.2018) செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

"நாகப்பட்டினம் மாவட்டத்தில் "கஜா"புயலின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டபகுதிகளில் சீரமைப்புபணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் படிஅனைத்துத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களையும் ஒருங்கிணைத்து பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் பணிகள் வேகமாக நடைபெற்றுவருகின்றன. முதற்கட்டமாக அனைத்து கிராமங்களுக்கும் செல்லும் பிரதான சாலைகளில் சாய்ந்து விழுந்துள்ள மரங்கள் தேசிய பேரிடர் மேலாண்மை படையினர் மூலம் அகற்றப்பட்டுள்ளன. இதற்காக 151 நவீன மரம் அறுக்கும் இயந்திரங்கள், 92 பொக்லைன் இயந்திரங்கள் மற்றும் 28 லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மீட்புப் பணிகளுக்காக 358 ஜெனரேட்டர்கள் உட்பட 2000 பணியாளர்கள் இரவு பகலாக பணிபுரிந்து வருகின்றனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழையையொட்டி வழக்கமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. "கஜா" புயலானது அதிதீவிரமாக கரையை கடக்கக் கூடும் என வானிலை மையம் அறிவித்ததையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்துத் துறை மாண்புமிகு அமைச்சர்கள், உயர் அலுவலர்களிடம் தேவையான முன்னெச்சரிக்கைப் பணிகளை எடுக்க அறிவுறுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து தமிழகத்திலுள்ள 7 கடலோர மாவட்டங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. "கஜா" புயலின் விளிம்பு, கண் பகுதி, பின் பகுதி ஆகியவை வேதாரண்யம் பகுதியிலேயே கரையை கடந்துள்ளது. புயலில் சிக்கி விழுந்துள்ள மரங்களை அகற்றவும், சேதமடைந்துள்ள மின் கம்பங்களை மாற்றிடவும் தீவரமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடலோர கிராமங்களில் வீடுகள், மரங்கள், பொதுமக்களின் அடிப்படைவ வாழ்வாதாரங்களின் சேதம் குறித்து கணக்கெடுக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. மேலும் புயலால் பாதித்த பகுதிகளில் எந்தவித தொற்று நோய் பரவாமல் இருக்க சுகாதாரத்துறை சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து கிராமங்களுக்கும் நடமாடும் மருத்துவக்குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஜெனரேட்டர்கள் மூலம் மின்வசதி ஏற்பாடு செய்து குடிநீர் தொட்டிகளில் நீர் ஏற்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீட்பு மற்றும் சீரமைப்புப் பணிகளின் நிலவரம் குறித்து அவ்வப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது கவனத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது. முதற்கட்டமாக அனைத்து மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றுக்கு மின் இணைப்பு வழங்கிடும் வகையில் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. புயலால் தங்களது உடைமைகளை இழந்துள்ள அனைத்து மக்களுக்கும் நிவாரணம் வழங்கிட தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

கடலோர கிராமங்களில் சாலை வசதி, மின் இணைப்பு மற்றும் தொலை தொடர்பு வசதி ஆகியவற்றை விரைந்து சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொற்று நோய்கள் பரவாமல் இருக்க 2500 பவர்ஸ்டார் இயந்திரங்கள் மூலம் பிளீச்சிங் பவுடர் தெளிக்கப்பட்டுள்ளன. கோடியக்கரை மற்றும் வேதாரண்யம் பகுதிகளில் கூடுதல் ஆம்புலன்ஸ் வாகனங்கள் வரவழைக்கப்பட்டுள்ளன.

புயலின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களில் இயல்பு நிலைக்கு கொண்டு வர அனைத்து நடவடிக்கைகளும் தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது."எனதெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் மரு.கே.கோபால், பொதுசுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஜெ.இராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.வ.முருகேசன், இணை இயக்குநர்(மருத்துவப் பணிகள்) மரு.மகேந்திரன், செய்திமக்கள் தொடர்புஅலுவலர் திரு.மீ.செல்வகுமார் உட்பட அரசுஅலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்திவெளியீடு: செய்திமக்கள் தொடர்புஅலுவலகம்,நாகப்பட்டினம்.